(3) அமைச்சரின் அறிக்கை.

21—2—75-ம் நாளன்று ஒரு துணை வினவிற்கு அளித்த விடையைத் **திருத்தி அறநிலையத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 21—2—1975-ம் நாளன்று **சட்டப் பேரவை வெள்ளிக் குறியிட்ட வினா எண் 19-னை யொட்டிய** திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் துணை வினவிற்கு **தாம் அளித்த விடையைத் திருத்தி மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை இந்த அவைக்கு அளிப்பார்கள்.**

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மது விலக்கு அமல்படுத்தப்பட்டுள்ளதால், வேலையிழந்த மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு உதவும் வகையில் கதர், கிராமத் தொழில் கமிஷனின் உதவியுடன் புதிய திட்டங்கள் எவையேனும் செயல் படுத்தப்பட்டுள்ளனவா ? ஆம் எனில், அதன் விவரம் யாது ? என்பதைப்பற்றிய வெள்ளிக் குறியிட்ட சட்டப் பேரவை வினா **எண் 19-க்கு 21—2—1975 அன்று நான் விடையளித்தேன்.**

மேற்கூறிய அவ்வினாவினை ஒட்டிய துணை வினாவாக திரு. ஆர். பொன்னப்ப நாடார், சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள், மது விலக்கு அமல்படுத்தப்பட்டதால், வேலை இழப்பு ஏற்பட்டவர் களுக்கு ரூ. 200 கடன் கொடுப்பதாக விவர அறிக்கையில் கூறப்பட் டிருக்கிறது என்றும், மாங்களை ஏலம் எடுப்பதற்கு இது மிகவும் குறைவாக இருக்கிறதென்றும் தெரிவித்த அவர், இருக்கிற விலைவாசி அடிப்படையில் இதை பாதி மானியமாகவும், பாதிக் கடனாகவும் கொடுப்பதோடு, இந்தத் தொகையை ரூ. 200 என்பதை ரூ. 500 ஆக உயர்த்துவதற்கும் அரசு வழிவகை செய்யுமா என்று கேட்டார்கள். அதற்கு விடையாக ரூ. 200-ல் ரூ. 50 அரசு மானியமாகவும், ரூ. 150 கடனாகவும் தருகிறோம் என்றும், இதில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர் பிரதிநிதிகளை அழைத்து ரூ. 200 போதுமான அள விற்கு இருக்கும் என்று அவர்கள் குறிப்பிட்ட காரணத்தால், அகில இந்திய காதி கமிஷனிடம் பேச்சு வார்த்தை நடத்தி ரூ. 200 என்று நிர்ணயம் செய்து, ரூ. 150 கடனாகவும், ரூ. 50 மானியமாகவும் தருகி றோம் என்று பதில் கூறியுள்ளேன்.

ஆனால் மேற்கூறிய ரூ. 200-ல் பனைவெல்லாம் தயாரிக்கும் கருவிகள் வாங்குவதற்கென ரூ. 25 மானியமாகவும், ரூ. 25 கடனாகவும், பனை முதலீட்டுக்கும் மரங்களை குத்தகை எடுப்பதற்கும் ரூ. 150 கடனாகவும், ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாடு 1975-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்ட

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தமிழ்

(அ) தமிழ் நாடு 1975-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

எண் 54/75).

முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு

மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

அட்டவணை, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.